Registered as a Newspaper   பக்கங்கள் 04   விலை: ரூபா 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2024   ஆடி 30   [14-08-1993]   சனிக்கிழமை   ஓசை 177

## எழுதுவினைஞரைச் சேர்க்க நேர்முகப் பரீட்சை ஆரம்பம்

கடந்த ஆண்டு நடைபெற்ற ஆட்சேர்ப்பு பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களில் இருந்து எழுதுவினைஞர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுவருவதாக பொது நிர்வாக உள்துறை அமைச்சு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. 1500 எழுதுவினைஞர்கள் நாடு முழுவதிலிருந்தும் தெரிவு செய்யப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கணக்கு பதிவாளர்கள், களஞ்சியப்பொறுப்பாளர்கள், சிறாப்பர்கள் ஆகியோரை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் பின்னர் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### [ போர்க் கைதிகள் விவகாரம் ]

# ஜனாதிபதியை சந்திக்கும் பெற்றோர் முயற்சி தோல்வி

(கொழும்பு)

கொழும்பு திரும்பிய போர்க் கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க நேற்று எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பிய போர்க் கைதிகளின் உறவினர்கள் அவர்களது விடுதலை குறித்து ஜனாதிபதியைச் சந்தித்து பேசவே திட்டமிட்டிருந்ததாகவும் எனினும் அம்முயற்சி பலனளிக்கவில்லை எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதியை சந்திக்க முடியாத நிலையில் இவர்கள் ஜனாதிபதியின் செயலாளரை சந்திக்க எடுத்த முயற்சியும் கைகூடவில்லை. எனினும் இவர்கள் ஜனாதிபதியின் செயலாளரின் அலுவலகத்தில் சில இராணுவ அதிகாரிகளை சந்தித்து உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சந்திப்பின் போது போர்க் கைதிகளின் விடுதலைக்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாக இராணுவ அதிகாரிகள் தரப்பில் உறவினர்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள போர்க்கைதிகளின் உறவினர்கள் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்துவிட்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு சென்றதும் அரசு மற்றும் இராணுவ உயர் தலைவர்களை சந்தித்து தமது பிள்ளைகளை விடுவிக்க தாம் உடனடி முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக இவர்கள் தெரிவித்தனர்.

எனினும் இவர்கள் நேற்று வரையில் அரசாங்கத்தின் உயர் தலைவர்களையோ இராணுவ உயர் அதிகாரிகளையோ சந்திக்க முடியாமற் போனமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கைதிகள் விடுதலை விவகாரம் அரசு புதிய நாடகம்

(கொழும்பு)

யில் இந்த கைதிகள் பரிமாற் அரசினால் கை தா கி யு ள் ள

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.


## 'குமண' ஞாயிறு வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் "குமண" கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டுள்ளது.

இக்கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்ற பொருள்களின் பட்டியல்களின் விபரம் நேற்று மாலைவரை எமக்கு கிடைக்கவில்லை. (பா)



விடுதலைப்புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள போர்க்கைதிகளின் உறவினர்கள் நேற்று முன்தினம் கொழும்பு திரும்புகையில் போர்க் கைதிகளிடம் விடைபெற்றுச் செல்லும் போது எடுக்கப்பட்ட படம்

# விமான குண்டுவீச்சை நிறுத்த ஜனாதிபதிக்கு கடிதம்

## ஆயர் ஜெபநேசன் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஜூலை கடைசி வாரத்தில் மீளவும் வான்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது குறித்து எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்று தென்இந்தியத் திருச்சபையின் யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக் கடிதத்தில்:

ஜூலை கடைசி வாரத்தில் நடாத்தப்பட்ட வான் தாக்குதலினால் பல அப்பாவி மக்கள் உயிரிழக்க நேரிட்டது. ஜூலை 27இல் சிறிலங்கா விமானப் படை திருநெல்வேலி மற்றும் கோப்பாய்க் கிராமங்களின் மீது குண்டு வீசியதால் நான்கு மாணவர்களும், மற்றொருவரும் கொல்லப்பட்டனர். எட்டுப் பேர் பாரிய காயங்களுக்கு உள்ளானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 30ஆம் திகதி விமானப்படை சித்தன்கேணிக் கிராமத்தின்மீது தாக்குதல் நடத்தியது. சித்தன்கேணி எனது காரியாலயத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ள கிராமமாகும். இத் தாக்குதல் சம்பவத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த க.பொ.த. உயர் வகுப்பு மாணவன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலை, கிளாலி பகுதியில்

யாத நிலையில் இவர்கள் ஜனாதிபதியின் செயலாளரை சந்திக்க எடுத்த முயற்சியும் கைகூடவில்லை. எனினும் இவர்கள் ஜனாதிபதியின் செயலாளரின் அலுவலகத்தில் சில இராணுவ அதிகாரிகளை சந்தித்து உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சந்திப்பின் போது போர்க் கைதிகளின் விடுதலைக்கு தேவையான நடவடிக்கைகளை விரை அதிகாரிகள் தரப்பில் உறவினர்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள போர்க்கைதிகளின் உறவினர்கள் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்துவிட்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு சென்றதும் உயர் தலைவர்களை சந்தித்து தமது பிள்ளைகளை விடுவிக்க தாம் உடனடி முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக இவர்கள் தெரிவித்தனர்.

எனினும் இவர்கள் நேற்று வரையில் அரசாங்கத்தின் உயர் தலைவர்களையோ இராணுவ உயர் அதிகாரிகளையோ சந்திக்க முடியாமற் போனமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கைதிகள்விடுதலைவிவகாரம்
## அரசு புதிய நாடகம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வசமுள்ள 33 போர்க் கைதிகளையும் விடுவிக்க புலிகள் முன்வந்தால் சிறிலங்கா இராணுவம் தன்னிடமுள்ள 33 தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய தயாராக இருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகம் மீண்டும் அறிவித்துள்ளது.

சிறிலங்கா இராணுவம் தன்னிடமுள்ள கைதிகள் 60 பேரின் பெயர்ப்பட்டியலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ளது என கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார். ஒருவருக்கு ஒருவர் என்ற ரீதியில் இந்த கைதிகள் பரிமாற்றத்தை மேற்கொள்ளலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது

சிங்கள யுத்தக் கைதிகள் முதலில் உண்ணாவிரதமிருந்த போது யுத்தக் கைதிகளை விடுவிப்பதாயின் சிறிலங்கா அரசினால் கைதாகியுள்ள விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுபவர்களை விடுதலை செய்யவேண்டும் என புலிகள் நிபந்தனை விதித்தனர். ஆனால் அரசு அப்படியான சந்தேகநபர்களின் பெயர்ப் பட்டியலை பாதுகாப்புக் காரணத்தை முன்னிட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா கொலையில் மேலும் இருவர் கைது

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் கொலை தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிசார் அறிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கிளாலி படுகொலைச் சம்பவம்

## காயமடைந்த இருவரும் அநுராதபுரத்தில் விடுவிப்பு

கிளாலி கடற்பரப்பில் கடந்த 28 ஆம் திகதி கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி, கடற்படையால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இரு பயணிகளும் விடுவிக்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சிகிச்சை முடிந்ததும் கொழும்பு செல்வர் எனவும் இவர்களில் ஒருவர் கொழும்பை வதிவிடமாக கொண்டவர் எனவும் தெரியவருகிறது.

பொதுமக்கள் ஐ.மு. சார்பில்

## ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவோ போட்டி?

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை இம்மாத முடிவிற்குள் ஆரம்பிக்க இருப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கூறியது. இதன் கீழ் மாவட்டக் குழுக்கள் அமைத்து அதன் தொகுதி அமைப்பாளர்களுக்குப் புதிய வேலைத் திட்டங்கள் பற்றிய கருத்துக்களை வழங்குவது முக்கியமாக நடைபெற்று வருவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் தி. மு. ஜயரத்னா கூறியுள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலின்போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## ... வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் "குமண" கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டுள்ளது.

இக்கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இக்கப்பலில் எடுத்துவரப்படுகின்ற பொருள்களின் பட்டியல்களின் விபரம் நேற்று மாலைவரை எமக்கு கிடைக்கவில்லை. (பா)

## 4000 மெ. தொன் மாவுடன் வாதுவ திங்கள் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கென சுமார் 4000 மெற்றிக் தொன் மாவை கொழும்பு துறைமுகத்தில் ஏற்றும்பணியில் 'வாதுவ' கப்பல் ஈடுபட்டுள்ளது.

இக் கப்பல் நேற்று மாலை வரை பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி புறப்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை.

மேலும் மா ஏற்றி முடிந்ததும் இக் கப்பல் அங்கிருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இம்மாத இறுதியில் செயலகத்துக்கு மண்ணெய்

(யாழ்ப்பாணம்)

இம் மாத இறுதிப் பகுதியில் இருந்து மீண்டும் யாழ். செயலகத்திற்கு மண்ணெய் அனுப்பிவைக்க புனர்வாழ்வு அமைச்சு இணங்கியிருப்பதாக யாழ், செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது மண்ணெய் பரல் தட்டுப்பாட்டின் காரணமாக யாழ் செயலகத்திற்கான மண்ணெண்ணெய் அனுப்பி வைக்கும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து சிங்கப்பூரில் இருந்து தேவையான தகடுகள்கொள்வனவு செய்யப்பட்டு கொழும்பில் வைத்து மண்ணெய் பரல் தயாரிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

போதிய அளவு பரல்கள் தயாரித்து முடிந்ததும் யாழ். செயலகத்திற்கு தொடர்ந்து இம் மாத இறுதிப்பகுதி தொடக்கம் மண்ணெய் அனுப்பி வைக்கப்படுமென புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்திருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# ஜனாதிபதிக்கு கடிதம்
## ஆயர் ஜெபநேசன் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஜூலை கடைசி வாரத்தில் மீளவும் வான்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது குறித்து எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் என்று தென்இந்தியத் திருச்சபையின் யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இக் கடிதத்தில்:

ஜூலை கடைசி வாரத்தில் நடாத்தப்பட்ட வான் தாக்குதலினால் பல அப்பாவி மக்கள் உயிரிழக்க நேரிட்டது. ஜூலை 27 இல் சிறிலங்கா விமானப் படை திருநெல்வேலி மற்றும் கோப்பாய்க் கிராமங்களின் மீது குண்டு வீசியதால் நான்கு மாணவர்களும், மற்றொருவரும் கொல்லப்பட்டனர். எட்டுப் பேர் பாரிய காயங்களுக்கு உள்ளானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 30ஆம் திகதி விமானப்படை சித்தன்கேணிக் கிராமத்தின்மீது தாக்குதல் நடத்தியது. சித்தன்கேணி எனது காரியாலயத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ள கிராமமாகும். இத் தாக்குதல் சம்பவத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த க.பொ.த. உயர் வகுப்பு மாணவன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலை, கிளாலி பகுதியில் புக்காரா குண்டு வீச்சு

(தென்மராட்சி)

சிறிலங்கா விமானப் படைக்குசொந்தமான இருபுக்காரா குண்டுவீச்சு விமானங்கள் நேற்றுக் காலை கிளாலி முகமாலைப்பகுதியில் கடும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின. அப்பகுதிகளில் சுமார் அரைமணி நேரம் இவ் இரு விமானங்களும் இத் தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலினால் வீடு ஒன்று தரைமட்டம் ஆகியதுடன்பெறுமதியான உடைமைகளும் சேதமாகின. உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. குண்டு வீழ்ந்த இடங்களில் பாரிய குழிகள் காணப்பட்டன. தரைமட்டமாகிய வீட்டில் வசித்த ஐவர் காயம் எதுவுமின்றி தப்பினர்.

நேற்று காலை 8. 15 மணிக்கு ஆனையிறவு பகுதியில் இருந்து வந்த இரு புக்காரா விமானங்கள் பச்சிலைப்பள்ளிப் பகுதியை இரு தடவை சுற்றிவிட்டு திடீரென குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின.

இதில் முகமாலையில் உள்ள பாலசுப்பிரமணியம் மவேந்திரராணி என்பவரது வீட்டின் மேல் முதலாவது குண்டு வீழ்ந்து வெடித்ததால் வீடு தரைமட்டம் மாகியது. வீட்டின் சிலாகை, மரங்கள் அருகில் உள்ள தென்னை மரத்தில் தொங்கின.

இரண்டாவது குண்டு அவரது வீட்டு முன் முற்றத்தில் வீழ்ந்து வெடித்தது. இதனால் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

மூன்றாவது குண்டு இவரின் வீட்டின் பின்பக்க தென்னம் காணி ஒன்றில் வீழ்ந்தது. அங்கும் பாரிய குழி ஒன்று காணப்பட்டது. இச் சம்பவத்தின்போது இவ்வீட்டிலிருந்தவர்கள் 50 யார் தூரத்தில் படுத்திருந்ததால் உயிர் தப்பினர்.

மேற்படி குண்டுவீச்சு விமானங்கள் அரைமணித்தியாலத்தின்பின் கிளாலிக் கடற்கரையை அண்டிய பகுதிகளில் இரு குண்டுகளை போட்டன. இக் குண்டுகள் கடலில் வீழ்ந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முதல்குண்டு வீட்டின்மேல் விழுந்தது மற்றையவை வளவில் வீழ்ந்தன
## முகமாலை தாக்குதல் குறித்து விபரிப்பு

(தென்மராட்சி)

''அம்மம்மா ஓடி வாருங்கள் என்ற என்து பேரப்பிள்ளைகளின் அவலக் குரலைக்கேட்ட நான் எல்லோரையும் கூட்டிக் கொண்டு ஓடி 50யார் தூரத்தில் வீழ்ந்து படுத்தேன். அப்போது எனது வீட்டின் மேல் முதல் குண்டு வீழ்ந்தது. எழும்பி தலையை உயர்த்திப் பார்த்தபோது எல்லா இடமும் புகைமண்டலமாக காட்சி அளித்தது''

இவ்வாறு முகமாலையில் நேற்று காலை 'புக்காரா' விமானங்கள் நடாத்திய குண்டு விச்சு தாக்குதல் குறித்து பாலசுப்பிரமணியம் மாவேந்திரராணி (வயது 69) எமது தென்மராட்சி செய்தியாளருக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் நானும் எனது மருமகளும் 3 பேரப் பிள்ளைகளும் காலை சாப்பாட்டினை தயாரித்துக் கொண்டு இருந்தோம். பேரப்பிள்ளைகள் என்னையும், மருமகளையும் அம்மா, அம்மம்மா, ஓடி வாருங்கள். பொம்பர் சுற்றுது என்றவுடன் நான் ஓடிவந்து எல்லோருமாக சேர்ந்து விமானம் வரும் இரைச்சலைக் கேட்டு பயந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண் அமைக்கும் முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் காவலரண் அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய எறிகணைத் தாக்குதல்களால் இராணுவத்தினர் சிதறி ஓடினர்.

நேற்றுக்காலை காரைநகர் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரில் சுமார் 25 பேர் தும்பில்ப்பிட்டி பகுதியில் காவலரண் அமைத்துக் கொண்டிருந்தபோது ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

இதன்போது இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டு நாலாபுறமும் சிதறி ஓடி பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக்கொண்டனர். மேற்படி புலிகள் நடாத்திய தாக்குதலினால் இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

ஆறுமுகம் ராகினியின் இல- 697141138V அடையாள அட்டை மல்லாகத்திற்கும் தாவடிக்கும் இடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர். தயவு செய்து திருமகள் புடவையகம் 156, நவீன சந்தை, யாழ்ப்பாணம். அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5677)

### வடமராட்சி சுருக்கெழுத்து கழகம்

சான்றிதழ் வழங்கும் வைபவமும், புதிய வகுப்பு ஆரம்ப வைபவமும் 22-08-1993-ல் நடைபெறவுள்ளது இதுபற்றி கலந்துரையாடுவதற்காக அங்கத்தவர்கள், புதிய மாணவர்கள் அனைவரும் 15-08-1993 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு பயிற்சி நிலையத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். செயலாளர். (5683)

### வியாழ மாற்றம் பலன்கள்

ஜோஸ்யர் முத்திரை, சிறுவர்களுக்கு அறிவு நூல், கல்வியல் புலத்துக்கு ஆய்வு நூல், பாமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலன்கள், வியாபாரிகளுக்கு கழிவுண்டு, ஸ்ரீகாந்த புத்தகசாலை நல்லூர் மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-7184)

### பழுது பார்க்க வாங்க, விற்க

பழுதடைந்த சேற் றேடியோக்கள், மேசை, சுவர்-கைக் கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், விற்கப்படும், நிபுணர்களால் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். டில் காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகாமை) கிளை:- கண்டி வீதி, சாவகச்சேரி. (சி7168)

### தவறிவிட்டது

611780077V இலக்கமுடைய சுப்பிரமணியம் கருணாகரன் என்பவரின் அடையாள...

# ஆஸ்பத்திரி வளாகத்துள் புகைபிடிக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் நோயாளரை பார்வையிடுவோர் வைத்தியசாலைக்குள் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ் பொது வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கான சுற்று நிருபம் ஒன்று சுகாதார அமைச்சினால் யாழ். பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ் பொது வைத்தியசாலை வளாகம் மற்றும் வைத்தியசாலையின் கேநீர்ச்சாலை ஆகிய இடங்களில் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும். மேற்படி இடங்களில் புகைபிடிப்பதினால் அங்கு சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு மேலும் பல நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் இவ்வாறான அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் மேற்படி சுற்று நிருபத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (பா) (தி)

## மண்ணெய் புள்ளி கூடுதல் பெறுமதி வழங்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் முத்திரையின் பெறுமதி யூலை 8ஆம் தொடரின் 4ஆம் புள்ளியிலிருந்து பெறுமதி அதிகரிக்கப்பட்டதை அடுத்து இம்மாதப் புள்ளியுடன் யூலை மாதத்தில் மேலதிகமாக கிடைக்க வேண்டிய ரூபா 15/- சேர்த்து பொருள்களை வழங்கும்படி யாழ். செயலகம் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் கேட்டுள்ளது.

மேற்படி மாதப் புள்ளியில் ரூபா 29/00 இல் இருந்து 44/- ஆக புள்ளியின் பெறுமதி உயர்த்தப்பட்டமை தெரிந்ததே. எனினும் யாழ். மாவட்டத்திற்கு இச்சுற்று நிருபம் இந்த மாதமே கிடைக்கப்பெற்றது.

இதனால் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் யூலை மாதம் எட்டாம் தொடரின் 4ஆம் புள்ளிக்கு 29/- ரூபா பொருள்களை வழங்கி 4ஆம் புள்ளியின் பாவனைக் காலம் முடிவடைந்து விட்டதால், உறுதிச் சீட்டுக்களைச் சமர்ப்பித்துவிட்டன.

எனவே யூலை மாதப் புள்ளிக்கு 44/- ரூபாவிற்குரிய பொருள்களை பாவனையாளருக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என யாழ். செயலகம் அறிவித்துள்ளது (தி), (பா)

### வருடாந்த உற்சவம்

சில்லாலை கதிரைமாதா ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

### பெறுபேறு மதிப்பீடு

1992 க. பொ. த (சா/த) உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பரீட்சைப் பெறுபேறுகளை மதிப்பீடு செய்து இது பற்றிய விவரங்களைக் கோட்டக்கல்வி ரீதியாகத் தயாரித்து உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் கல்வித் திணைக்கள மதிப்பீட்டுப் பிரிவு கோரியுள்ளது. (17)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

யாழ் / பல்கலைக்கழகத்

### வெற்றுப்பீப்பா பெற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வெற்றுப் பீப்பாவின் பற்றாக்குறையை நீக்க சிங்கப்பூரிலிருந்து 'ஸ்ரீல்' பெற்று பீப்பாக்கள் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்மாத முடிவில் பீப்பாக்களின் தட்டுப்பாடு நீங்கும் என தெரிவிக்கப்பட்டது

வெற்றுப் பீப்பாக்கள் அற்ற நிலையில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதில் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாம். (தி) (பா)

### ஒழுக்காற்று நடவடிக்கை

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள 5-ம் ஆண்டு...

### ஆண்டு நிறைவும் கலை விழாவும்

(பருத்தித்துறை)

தென்புலோலி அருணா பாலர் பாடசாலையின் 2-ம் ஆண்டு நிறைவு விழாவும், கலைவிழாவும் அறிவகம் சனசமூக நிலைய முன்றலில் திரு. ச. ரகு தலைமையில் நடைபெற்றது விழாவை பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர் மங்கள விளக்கேற்ற வடமராட்சிமாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. வைத்தி தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். பல பிரமுகர்களின் உரைகளையடுத்து சிறுவர் கலைவிழா நடைபெற்றது. (25)

## பிரதி தபால்மா அதிபர் ஓய்வு அடுத்தது யார்?

(யாழ்ப்பாணம்)

தற்போது வடமாகாண பிரதித் தபால் மா அதிபர் பதவியில் இருக்கும் திரு. எஸ். எம். சேதுகாவலர் தமது பதவியில் இருந்து விரைவில் ஓய்வு பெற இருப்பதாக தபால் திணைக்களத்தில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

இவர் ஓய்வு பெறுவதால் ஏற்படும் மேற்படி பதவி வெற்றிடத்துக்கு அடுத்தது யார் நியமிக்கப்படுவார் என்ற நிலை தோன்றியுள்ளது. தபால் திணைக்களத்தில் இருந்து எமக்கு இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி பிரதித்தபால் மா அதிபரின் செயலாளராக தற்போது கடமையாற்றும் திரு சடாட்சரநாதன் மேற்படி வெற்றிடத்துக்குநியமிக்கப்படலாம்என்று சூசகமாக தெரியவருகிறது.

அதேவேளை மேற்படி இரு அதிகாரிகளும் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு சென்றிருப்பது மேற்படி பதவி மாற்றத்திற்காக இருக்கலாம் என்று மற்றொரு உத்தியோகப் பற்றற்ற தகவல் தெரிவிக்கின்றது. [யோ]

மாகாண கல்வி அமைச்சு பணிப்பு

## ஆசிரிய இடமாற்றம் மூலம் பற்றாக்குறை நிவர்த்தியாக்கவும்

பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் இருந்தால் அவர்களை பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு உடனடியாக மாற்றி அதன்பின்னரும் மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களின் பட்டியலை இடமாற்றம்செய்ய தமக்கு பெயர்களை சிபார்சு செய்யுமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு எம் ஏ சி மொகைதீன் அவர்கள் சகல மாவட்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள இடமாற்றம் சம்பந்தமான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலதிக ஆசிரியர்களை வைத்திருக்கும் கல்வி அதிகாரியிடம் இருந்தே இவ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வேதனம் அறவிடப்படும் எனவும் தனித்தனி இடமாற்ற விண்ணப்பப்படிவங்களை அனுப்புவதைத்தவிர்த்து இடமாற்றம் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களைசேர்த்து இரண்டு வாரங்களுக்கொரு தடவை தமக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் பணித்துள்ளார். (17)

## கடும் நோயாளி ஒருவர் விமானமூலம் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது வைத்தியசாலையில் இருந்து மூளை சம்பந்தமானநோயாளிஒருவர் ... வரே சிகிச்சைக்கு விமான மூலம் அனுப்பிவைக்கப்பட்டவராவார்.

பருத்தித்துறையில் இருந்து ...

உதைபந்தாட்ட வீரர்

## ஆள் மாறாட்டத்தை தடுக்க புதிய நடைமுறை

(வடமராட்சி)

உதைபந்தாட்டத்தில் ஏற்படும் ஆள்மாறாட்டத்தைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் ஒக்டோபர் மாதம் முதல் மேற்கொள்ளபடவுள்ளதாக வடமராட்சி லீக் வட்டாரம் தெரிவித்தது

விளையாட்டுக்களில் பங்குபற்றும் வீரர்கள் விளையாட்டுக் கழகங்களினால் வழங்கப்படும் உதைபந்தாட்ட அடையாள அட்டையைக் கொண்டிருக்க வேண்டும்.

அதே சமயம் உதைபந்தாட்ட வீரர்களில் 7 பேர் பாதணிகளுடன் விளையாட வேண்டும். இந்நடைமுறை ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. (யோ)

### தென்மராட்சியில் போசாக்குணவு

தென்மராட்சி தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினர் தென்மராட்சிப் பகுதியிலுள்ள எட்டுப் பாலர் பாடசாலைகளின் சிறார்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் நோக்குடன் போசாக்கு உணவுவகைகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## அறிவித்தல்

14-08-93 சனி அன்று நடைபெறவிருந்த சுழிபுரம் மேற்கு ஐங்கரன் கலாமன்றத்தின் வீரகுமாரன் நாடகம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம். மேடையேறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— நிர்வாகம்

[5686]

## நினைவு கூருகின்றோம்... 1993-08-14

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் சங்கானையில் சிறிலங்கா படையினரால் படுகொலை செய்யப்பட்ட 06 தமிழிளைஞர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு - கழுதாவளைப் பகுதியில் தேசவிரோத சக்திகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு, எமைப் பிரிந்த -

**திருசாமி** (கா- இரத்தினசிங்கம் - களுதாவளை - மட்டு)

**வினோபா** (க. ஜெகதீஸ்வரன் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

1989ஆம் ஆண்டு மட்டு - பழுகாமம் பகுதியில் இந்திப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுப்பிரமணியன்** (சு பிரமணியம் கிதாகரன்- ஆரையம்பதி - மட்டு)

மட்டு - 38ஆம் கிராமப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில். வீரச்சாவெய்திய -

**நந்தன்** (சின்னத்தம்பி நந்தகுமார்- 38-ம் கிராமம்-மட்டு)

இதே பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கண்ணன்** (— — பெரியபோரதீவு - மட்டு)

திருமலை - மேன்காமம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

**சுட்டா** (ப. சிறிஸ்கந்தராசா - கங்குவேலி - திருமலை)

பருத்தித்துறை வியாபாரி மூலைப்பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இன்பருட்டியைச் சேர்ந்த நன ஆசிரியர் - யாக்கரையில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

## பழுது பார்க்க வாங்க, விற்க

பழுதடைந்த சகல றேடியோக்கள், மேசை, சுவர்-கைக் கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், விற்கப்படும், நிபுணர்களால் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். டில்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகாமை) கிளை:- கண்டி வீதி, சாவகச்சேரி. (சி7168)

## தவறிவிட்டது

611780077V இலக்கமுடைய சுப்பிரமணியம் கருணாகரன் என்பவரின் அடையாள அட்டை 11-08-93 அன்று கொக்குவிலுக்கும் இட்டா தெருவுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணாகரன் (தனு ஸ்ருடியோ) கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5684)

13-8-93 வெள்ளிக்கிழமை அன்று ராசாவின் தோட்ட வீதிக்கும், றக்கா றோட்டுக்கும் இடையில் சுதர்சன் என்பவருடைய ஒரு சங்கிலி தவறிவிட்டது அதனை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5689)

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி பழையபூங்கா வீதிப் பகுதியில் நேற்று பணப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பையில் சிறியதொகைப் பணமும், மருந்துக் குளிகைகளும் காணப்படுகின்றன ரட்ணம் என்பவரால் ஒப்படைக்கப்பட்ட இந்தப்பை நீல நிறமுடையது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

★

(யாழ்ப்பாணம்)

சதாசிவம் காசிநாதன் (சந்திவெளி முறக்கொட்டாஞ்சேனை) என்பவருடைய அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

யாக தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் கல்வித் திணைக்கள மதிப்பீட்டுப் பிரிவு கோரியுள்ளது. (17)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

யாழ் / பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருள்களை வழங்குவதற்கு முற்தேவை விபரங்கள் இத்துறையில் அனுபவமுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1 மிருதங்கம்
2 உடுக்கு
3 தவில்
4 வீணை/தம்புரா தாங்கி
5. நடராஜர் சிலை (மரத்தினாலானது)
6. திருஞானசம்பந்தர் சிலை [மரத்தினாலானது]

விண்ணப்பிப்போர் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடல் வேண்டும்.

1 முழுப்பெயர்
2. தொழில் புரியும் முகவரி.
3. அனுபவம்

மேற்குறிப்பிட்ட முற்தேவைகளைத் திருப்தி செய்து எம்மால் அங்கீகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்தே கேள்விப் பத்திரம் அழைக்கப்படும்.

மேற்கூறப்பட்ட விபரங்களை 'நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு 1993-08-20ஆம் திகதியன்று காலை 10 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ தபால் மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''முற்தேவை விண்ணப் ம்கோரல்'' எனக் குறிப்பிடவும்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

(சி/7186)

## பெற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வெற்றுப் பீப்பாவின் பற்றாக்குறையை நீக்க சிங்கப்பூரிலிருந்து 'ஸ்ரீல்' பெற்று பீப்பாக்கள் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்மாத முடிவில் பீப்பாக்களின் தட்டுப்பாடு நீங்கும் என தெரிவிக்கப்பட்டது.

வெற்றுப் பீப்பாக்கள் அற்ற நிலையில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதில் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

(தி) (பா)

## ஒழுக்காற்று நடவடிக்கை

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவு உள்ள 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை யாழ் மாவட்டத்தில் 94 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சை நடைமுறை பற்றிய விசேட அறிவுறுத்தல்களைப் பரீட்சை நிலைய உத்தியோகத்தர்களுக்கு யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் வழங்கியுள்ளார். பரீட்சை ஒழுங்கு விதிகளையும், நடை முறைகளையும் மீறுவோர் மீது திணைக்களம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் அறிவித்துள்ளார்.

## தங்கப்பதக்கம் பெற்றார்

(தென்மராட்சி)

1992ஆம் ஆண்டு யாழ் சைவபரிபாலன சபையினால் நடாத்தப்பட்ட 6ஆம் ஆண்டு வகுப்புக்குரிய சமயபாட பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் வெற்றியீட்டிய சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த ச மதுநந்தினி அவர்கள் தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார்.

இதேவேளை இம் மாணவி 1991ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இரண்டாம் இடத்தைபபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(86)

## நிலத்தினுள் புதையும் மலை

(கண்டி)

அப்புத்தளைப் பகுதியைச் சேர்ந்த தொட்டலாகலையில் அமைந்துள்ள கோழி கூப்பிட்டான் என்றழைக்கப்படும் மலை நிலத்தினுள் அமிழ்ந்து கீழிறங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது இது குறித்து ஆராய பதுளையில் உள்ள மண்வள ஆராய்ச்சி நிபுணர்கள் ஸ்தலத்திற்கு விரைந்துள்ளனர்.

ஆசிரியர்கள் இருந்தால் அவர்களை பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு உடனடியாக மாற்றி அதன்பின்னரும் மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களின் பட்டியலை இடமாற்றம்செய்ய தமக்கு பெயர்களை சிபார்சு செய்யுமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு எம் ஏ சி மொகைதீன் அவர்கள் சகல மாவட்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள இடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலதிக ஆசிரியர்களை வைத்திருக்கும் கல்வி அதிகாரியிடம் இருந்தே இவ் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வேதனம் அறவிடப்படும் எனவும் தனித்தனி இடமாற்ற விண்ணப்பப்படிவங்களை அனுப்புவதைத்தவிர்த்து இடமாற்றம் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களைசேர்த்து இரண்டு வாரங்களுக்கொரு தடவை தமக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் பணித்துள்ளார். (17)

## கடும் நோயாளி ஒருவர் விமானமூலம் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது வைத்திய சாலையில் இருந்து மூளை சம்பந்தமானநோயாளிஒருவர் அவசர சிகிச்சைக்காக விமான மூலம் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவருடன் வைத்தியர் ஒருவரும் கூடச் சென்றார்.

மண்கும்பானைச் சேர்ந்த-தற்போது இளிநொச்சியில் வசிப்பவராகிய நாகேந்திரம் வரதராஜா (24வயது) என்பவரே சிகிச்சைக்கு விமான மூலம் அனுப்பிவைக்கப்பட்டவராவார்.

பருத்தித்துறையில் இருந்து 'குமாரி'கப்பல் மூலமாக காங்கேசன்துறைக்குஇவர் கொண்டு செல்லப்பட்டு பலாலி விமான நிலையத்தில்வைத்து விமானம் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக யாழ் பொது வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா, (தி)

## பயிலுநர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக கடமை புரிபவர்களை 15. 2. 92-ம் திகதி நடாத்தப்பட்ட பரீட்சையில் 55 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுத்து சித்தியடைந்துள்ளவர்களை உடனடியாக அவர்களை சேவையில் நிரந்தரப்படுத்துவதற்குரிய விண்ணப்பப்படிவங்களை வழங்கி சேவையில் நிரந்தரப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வடக்குக்கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளது.

இவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு இவ் ஆசிரியர்கள் பட்டதாரிபயிலுநர்களாக தொடர்ந்து மூன்று வருடங்கள் சேவையாற்றியிருக்க வேண்டும் என்றும், சேவைக் காலத்தில் இவர்கள் சேவை திருப்திகரமானதாக இருந்திருக்கவேண்டும்என்றும்எதுவித ஒழுக்காற்றுநடவடிக்கைக்கு உட்பட்டிருக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கடற்புலிகள் வீரவணக்கக் கூட்டம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் வட்டத்தில் யூலை. ஆகஸ்ட் மாதங்களில் வீரச்சாவினை யடைந்த மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் எதிர்வரும் 19-ம் திகதி (19-8-93) வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு மாமுனை குடியேற்றத் திட்டத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் வட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. கார்த்திகன் தலைமையில் நடைபெறும் இவ் வீரவணக்கக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (36)

## முச்சக்கர வண்டி அம்புலன்ஸ்

கரவெட்டி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் அப்பகுதி மக்களின் வசதி கருதி முச்சக்கர வண்டி முதலுதவிச் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இராணுவ நடவடிக்கை மற்றும் விபத்துக்களின் போது காயமடைபவர்களை வைத்தியசாலைக்கு உடனே எடுத்துச் செல்லும் வகையில் இச்சேவை உதவுகிறது. (யோ)

1989ஆம் ஆண்டு மட்டு - பழுகாமம் பகுதியில் இந்திடப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுப்பிரமணியன்** (சுப்பிரமணியம் கிதாகரன்- ஆரையம்பதி - மட்டு)

மட்டு - 38ஆம் கிராமப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**நந்தன்** (சின்னத்தம்பி நந்தகுமார்- 38-ம் கிராமம்-மட்டு)

இதே பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கண்ணன்** (— — பெரியபோரதீவு - மட்டு)

திருமலை - மேன்காமம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

**சுட்டா** (ப. சிறிஸ்கந்தராசா - கங்குவேலி - திருமலை)

பருத்தித்துறை வியாபாரி மூலைப்பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இன்பருட்டியைச் சேர்ந்த நடன ஆசிரியர் - யாக்கரையில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

1990ஆம் ஆண்டு மட்டு - தாந்தாமலைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**அன்று** (— — அக்கரைப்பற்று - அம்பாறை)

**செல்வா** (வேல்முருகு தவராசா கருமுந்தான்வெளி - மட்டு)

**துஷ்யந்தன்** (— — கரவெட்டி - மட்டு)

மட்டு - கரடியனாறு, மரப்பாலம், இராஜபுரம், கொடுவாமடு மற்றும் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட 05 தமிழர்கள். கரடியனாறு எல்லை நகர்ப் பகுதியில் இனம்தெரியாத குழுவொன்றினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பெண். போராவெளி - ஈச்சந்தீவுப் பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள். முஸ்லீம் காடையர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த தமிழ்ப்பெண்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**வின்சன்** (முத்துராசா சுரேஸ்குமார் - பாலமோட்டை, தம்பலகமம் - திருமலை)

**லெப். சாப்தீன்** (சரவணமுத்து இராஜேந்திரன்-மருதங்குளம, புத்துவெட்டுவான் - கிளி.)

அம்பாறை சவளக்கடைச் சந்திப் பகுதியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது சிறிலங்கா காவல் துறையினர் மற்றும் முஸ்லீம் காடையர்களினால் கடத்திச் செல்லப்பட்டு மத்திய முகாம் பகுதியிலுள்ள பிள்ளையார் கோவிலடி மற்றும் 04-ம் பகுதியிலுள்ள சுடுகாடு ஆகிய இடங்களில் வைத்து கூரிய ஆயுதங்களால் தாக்கி படுகொலை செய்யப்பட்டும், கொலலப்பட்ட பின்னர் எரிக்கப்பட்டும் அழிக்கப்பட்ட 19 தமிழ் விவசாயிகள்.

மட்டு 13-ம் கிராமம் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட 16-ம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1992-ம் ஆண்டு தீவகத்திலிருந்து யாழ் - ஓட்டுமடம் பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில கொல்லப்பட்ட குழந்தை, பெண் ஆகிய 02 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7188)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.



### சிந்தனைக்கு

எதேச்சதிகார அரசின் வலிமை தன்னைக் கண்டு அஞ்சுவோரை தன்னை பின்பற்றி நடக்கக் கட்டாயப்படுத்துவதுதான்.

— ஹிட்லர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## சமாதான முயற்சியில் அரசிற்கு ஆர்வமில்லை

போர்க் கைதிகளைப் பார்வையிட வந்த பெற்றோர்கள் / உறவினர்கள் வெறுங்கையுடன் நேற்றுமுன்தினம் கொழும்பு திரும்பினர். தமது பிள்ளைகளுடனேயே வீடுதிரும்புவோம் என்ற நிலையில் இருந்து, இறங்கி அவர்கள் தென்னிலங்கை திரும்பியது கவலையளிக்கக்கூடிய விடயம் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அவர்கள் வெறுங்கையுடன் திரும்பியதற்கு முழுப் பொறுப்பையும் சிறிலங்கா அரசாங்கமே ஏற்கவேண்டும். ஏனெனில், கைதிகளை விடுவிப்பதற்கும், இனப்பிரச்சினைத் தீர்விற்கான ஒரு நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்கக் கூடிய சாதகமான நிலை இருந்தும், அதனை சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்தத் தவறிவிட்டது. சற்று திருத்தமாகக் கூறின் பயன்படுத்த விரும்பவில்லை என்றே கூறலாம்.

இப்பிரச்சினையில், அரசாங்கம் அக்கறை காட்டுவதாக இருந்திருந்தால், முதல் தடவை கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்ட போது ஏற்பட்ட உடன்பாட்டை நிறைவேற்றி இருப்பின் கைதிகள் விவகாரமே இப்பொழுது சுமுகமாக முடிவுற்றிருக்கும். இதற்கான சாதகமான சூழ்நிலை நிறையவே இருந்தது. உருவாகிய அந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், விடுதலைப்புலிகள் ஐந்து போர்க் கைதிகளை உடன்பாட்டின் சரத்துக்கள் எவையும் நிறைவேற்றப்படாத நிலையிலும் விடுதலை செய்தனர். பின்னரும், நோயுற்ற ஒருவரை விடுவித்தனர்.

ஆனால், அரசாங்கம் உடன்பாட்டை நிறைவேற்றத்தவறியது. இதற்கு, இராணுவத்தரப்பில் எழுந்த பலத்த எதிர்ப்பே காரணம் என அறிய வந்தது. உண்மையிலேயே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமாதானத்திற்கான நல்லெண்ண சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்க விரும்பின்

# நல்லூர் கண்காட்சி - '93

# நிச்சயமான ஓர் எதிர்காலம்

நல்லூரில் மின் விளக்குகளின் வெளிச்சத்தில் சுகத்தில் மயங்கிக் கிடக்கிறது நல்லூர் கண்காட்சி 93 தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் அனைத்துப் பகுதிகள் சகல கிளைகளை அடக்கிய கண்காட்சி அது. தமிழீழத்தின் சுய சார்புப் பொருளாதாரத்துக்கு இது ஓர் எடுத்துக்காட்டு என்று பார்வையாளரின் பாராட்டுக்கள் உலா வந்து கொண்டிருக்கின்றன.

வட தமிழ் ஈழத்தின் பொருளாதாரம் கருவாகி உருவாகி வளர்வது எப்படி என்பதைத் தெளிவாக கண்காட்சியில் காட்டியுள்ளார்கள். இக் கண்காட்சி எமது உற்பத்திகளுக்கு ஒரு பாரம்பரியத்தையும், அடையாளத்தையும் தந்திருக்கிறது மண் முதல் அடுப்பு வரை அனைத்துப் பொருள்களும், அவற்றின் பயன்பாடுகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சியில் நிலப் பயன்பாட்டை விளக்கும் படம் ஓர் ஆதர்ச வழிகாட்டி. யாழ் மாவட்டத்தின் நிலப் பயன்பாட்டில் காடு 2.4 சதவீதம் இயற்கை அதன் சமநிலையை பேணுவதாயின் காடு 33 சதவீதம் இருக்க வேண்டும். இத்தரவை தமிழீழத்தின் குடிசனத் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது யாழ். மாவட்டத்தில் 8 லட்சத்து 63 பேரும், கிளிநொச்சியில் 99,000 பேரும், மன்னார் மாவட்டத்தில் 1 லட்சத்து 29 ஆயிரம் பேரும் வாழ்கிறார்கள். இவற்றை விட தமிழீழத்தின் ஏனைய மாவட்டங்களிலும் குடிசனப் பரம்பல் யாழ் மாவட்டத்தை விடக் குறைவாகவே உள்ளது யாழ் குடா நாட்டு மக்கள் படிப்படியே பெருகி இடம்பெயர்ந்து ஆலக் கால் வைத்து காடுகளையும், தோட்டங்களையும் அழித்து குடியமர்வதனால், அது இயற்கையின் சமநிலை அழிவுக்குப் படிக்கல் நாட்டியசெயலாக அமையும். ஆகவே இங்கு குடியமர்ந்திருக்கும் மக்கள் காலப்போக்கில் புதிய இருப்பிடங்களைத் தமிழீழத்தின் ஏனைய மாவட்டங்களில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற தொலை நோக்கையும், தெளிவான இலக்கையும் இத்தரவுகள் சுட்டுகின்றன.

காட்சிப் பொருள்களைத் தேடி அலைந்த எமக்கு வாழ்க்கையின் தேவைகள் காரணமாக உருவாக்கப்பட்ட கூட்டடுப்பு மிகவும் பாராட்டும்படி இருந்தது. இந்தக் கண்காட்சியில் சிறந்த காட்சிப் பொருளுக்கான பரிசைக் கொடுப்பதற்கு சாதாரண வீட்டு அடுப்புகளின் நெருப்புக்குச் சொந்தம் கொண்டாடும் பெண்களை நடுவர்களாக நியமித்தால் சிறந்த விருதை கூட்டடுப்பு தட்டிச்செல்வது நிச்சயம்.

